அந்த இடத்திலும், 35-க்குப் பதிலாக, 36-ஆவது நோடல் டவுனாக அதை ஆக்கிக் கொண்டு, அந்தத் திட்டத்தை நாம் நிறைவேற்றிட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி அவர்கள் முன் வந்தால் ''அதற்கு சின்னசாமி— கந்தசாமி கூட்டுத் திட்டம்'' என்று பெயர் வைக்கலாமா? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: அரசிற்கு ஆட்சேபணை இல்லை (சிரிப்பு).

மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள்

196*வினா எண். 1731 (திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை) அமைச்சர்கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,

(அ) மேலூர் சட்ட மன்றத் தொகுதி, மேலூரில் வீட்டுவசதி வாரியம் மூலம் குடியிருப்புகள் கட்ட அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேலை இடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை

197(*வினா எண்.608(திரு. ஆர். சிங்காரம் மற்றும்திரு.ஆர்.எட்டியப்பன்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

வேலை கிடைக்காத இளைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை இரட்டிப்பாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?